# திறன்வளர் ஆசிரியர் மன்றம் மற்றும் வெற்றிக்கு வழி

## மாதிரிப் பொதுத்தேர்வு – ஜனவரி 2016

## தமிழ் இரண்டாம் தாள்

## முதல்கட்டத் தேர்வு – விடைக்குறிப்பு

**பிரிவு –I**

| வினா எண் | விடைக்குறிப்பு | வினாஎண் | விடைக்குறிப்பு |
|---|---|---|---|
| | **பகுதி -1** | | **பகுதி -3** |
| 1 | ப∴றீது | 11 | சுட்டெழுத்துமுன் மிகும். அ+குதிரை = அக்குதிரை (இது போல் பிற இடங்களும்) |
| 2 | படம் பார்த்தான் | 12 | ஐயோ! கிளி கல்லால் அடிபட்டதே! |
| 3 | ஐயவினா | 13 | இன்று பேருந்துகள் ஓடா. |
| 4 | நேர் நிரை | 14 | மலர்விழி |
| 5 | இந்திரன் | 15 | விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பதற்கேற்ப பாரதியார் இளமையிலேயே கவிபாடும் திறன் பெற்றிருந்தார். |
| | **பகுதி -2** | | |
| 6 | அன்ன | 16 | தொலைக்காட்சி, குளிரூட்டும் கருவி, செல்பேசி, கணினி முதலானவற்றைப் பழுது பார்க்கும் படிப்புகளும் உள்ளன. |
| 7 | இனமொழி | 17 | **உரையாடல்** நடைபெற்றது |
| 8 | வஞ்சி | 18 | மக்களை இலட்சியப்பாதையிலே அழைத்துச் செல்லும் வன்மையுடையதே மேடைப் பேச்சு. |
| 9 | பெருந்திணை | 19 | பொய்யழுகை (ஏமாற்றுதல்) |
| 10 | அகவற்பா | 20 | குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் |

| | **பிரிவு –II** ஏதேனும் 5 வினாக்களுக்கு மட்டும் | 5x2=10 |
|---|---|---|
| 21 | சொற்களில் முதல், இடை, கடை ஆகிய மூவிடங்களில் வரும் ஐகாரம் குறுகி ஒலிப்பது. 1<br>முதலில் ஒன்றரை மாத்திரையாகவும் இடையிலும் கடைசியிலும் ஒரு மாத்திரையாகவும் குறுகும். ½<br>(எ.டு) ஐப்பசி, தலைவன், தவளை ½ | 2 |
| 22 | ஒரு வினைமுற்று வினையெச்சப்பொருளில் வந்து மற்றொரு வினைமுற்றைக்கொண்டு முடிவது1½-(எ.டு) கண்ணன் சென்றனன் வென்றனன். ½ | 2 |
| 23 | விடை எட்டு வகைப்படும் ½அவை சுட்டு விடை, மறை விடை, நேர் விடை, ஏவல் விடை, உற்றது உரைத்தல் விடை, உறுவது கூறல் விடை, இனமொழி விடை, வினாவெதிர் வினாதல் விடை 1½ | 2 |
| 24 | வெற்றிலை – வெறுமை+ இலை<br>1. வெறு+ இலை– (ஈறுபோதல் விதிப்படி மை கெட்டது)<br>2. வெற்+ இலை – (முற்றும் அற்றோரோ வழி எனும் விதிப்படி உகரம் கெட்டது)<br>3. வெற்ற்+ இலை – (தன்னொற்றிரட்டல் எனும் விதிப்படி ற் இரட்டித்தது)<br>4. வெற்றிலை – (உடலோடு உயிர் வந்து ஒன்றுதல் இயல்பே) | 4x½=2 |

| வினா | | அடுக்குத்தொடர் | இரட்டைக்கிளவி | மதிப்பெண் |
|---|---|---|---|---|
| 25 | 1 | சொற்கள் தனித்தனியே நிற்கும் | ஒன்றுபட்டு நிற்கும் | 4x½=2 |
| | 2 | பிரித்தால் பொருள் தரும் | பிரித்தால் பொருள் தராது. | |
| | 3 | நான்கு முறை வரை அடுக்கி வரும் | இரண்டு முறை மட்டும் வரும் | |
| | 4 | அச்சம் வெகுளி, விரைவு மகிழ்ச்சி முதலிய பொருள்களில் வரும் | இசை, பண்பு, குறிப்பு முதலிய பொருள்களில் வரும் | |

| | | |
|---|---|---|
| 26 | அந்தந்த நிலத்திற்குரிய மக்கள், தெய்வம், பறவை, விலங்கு முதலியவை | 2 |
| 27 | பாடுதற்குரிய ஆண்மகனின் வீரம், கொடை, கல்வி முதலியவற்றைப் பாடுவது | 2 |
| **பிரிவு III** | **பகுதி -1**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் | 2x5=10 |
| 28 | 1. ஈற்றடி முச்சீராய் ஏனைய அடிகள் நாற்சீராய் வரும் 1<br>2. இயற்சீரும் வெண்சீரும் வரும். பிற சீாகள் வாரா. ½<br>3. இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் வரும் பிற தளைகள் வாரா 1<br>4. செப்பலோசை பெற்று வரும். 1<br>5. இரண்டடி முதல் பன்னிரண்டு அடி வரை வரும். . ½<br>6.. ஈற்றடியின் ஈற்றுச்சீர் **நாள், மலர், காசு, பிறப்பு** என்னும் வாய்பாடுகளுள் ஒன்று. 1 | 5 |

<table>
<tr><td>29</td><td colspan="4">வஞ்சப்புகழ்ச்சி அணி. 1<br>பழிப்பது போல் புகழ்வதும் புகழ்வது போல் பழிப்பதும் வஞ்சப்புகழ்ச்சிஅணி. 2<br>கயவாகள் தேவருக்கு ஒப்பாகக் கூறப்பட்டாலும் மனம்போல தீமை செய்வா் எனப் பழிக்கப்படுகின்றனா் 2</td><td rowspan="3">5</td></tr>
<tr><td></td><td colspan="4">அல்லது</td></tr>
<tr><td></td><td colspan="4">இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தம் கற்பனை ஏற்றிக் கூறுவது தற்குறிப்பேற்ற அணி. 2எடுத்துக்காட்டு 1 - பொருத்தி எழுதுதல் 2</td></tr>
<tr><td rowspan="7">30</td><td>அழுக் /கா</td><td>நிரை நேர்</td><td>புளிமா</td><td rowspan="2">அசைபிரித்தல்<br>2 மதிப்பெண்</td><td rowspan="7">5</td></tr>
<tr><td>றுடை /யான் /கண்</td><td>நிரை நேர் நேர்</td><td>புளிமாங்காய்</td></tr>
<tr><td>ஆக் /கம் /போன்</td><td>நேர் நேர் நேர்</td><td>தேமாங்காய்</td><td rowspan="2">அசைபிரித்தல்<br>1½மதிப்பெண்</td></tr>
<tr><td>றில் /லை</td><td>நேர் நேர்</td><td>தேமா</td></tr>
<tr><td>ஒழுக் /கம்</td><td>நிரை நேர்</td><td>புளிமா</td><td rowspan="3">வாய்பாடு கூறல்<br>1½மதிப்பெண்</td></tr>
<tr><td>இலான் /கண்</td><td>நிரை நேர்</td><td>புளிமா</td></tr>
<tr><td>உயர்வு</td><td>நிரைபு</td><td>மலர்</td></tr>
<tr><td></td><td colspan="4">பகுதி -2எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும்</td><td>2x5=10</td></tr>
<tr><td>31</td><td colspan="4">கடந்த ஆண்டு பொங்கல் நிகழ்வுகள் - ஆட்சிப் பொறுப்பு - பொங்கல்தரும் புத்துணர்வு - நிலமகள் விளையாட்டு - முடியரசனின் கவிதை</td><td>5x1=5</td></tr>
<tr><td>32</td><td colspan="4">கமலநாதனின் புகைப்பழக்கம் - அலட்சியம் - நண்பனின் மரணம் - கமலநாதனின் மனமாற்றம் - மனைவியின் ஆலோசனை(மெல்ல மெல்ல மற)</td><td>5x1=5</td></tr>
<tr><td>33</td><td colspan="4">வடபகுதிக்குடும்பம் - தென்பகுதிக்குடும்பம் - ஏழைத்தாயின் ஏழாவது குழந்தை – காணாமல் போன தாய் நாய் - குட்டிகளின் பசியும் தாய்பால் ஊட்டிய தாயும்.</td><td>5x1=5</td></tr>
<tr><td></td><td colspan="4">பகுதி -3</td><td>3+2=5</td></tr>
<tr><td>34 அ</td><td colspan="4">வாட் ஹேப்பன்ட? - என்ன நடந்தது? அல்லது என்ன ஆயிற்று?<br>ஏன் லேட்டா வர்ரே? – ஏன் தாமதமாக வருகிறாய்?<br>டிராபிக் ஜாம் - போக்குவரத்து நெரிசல்<br>பஸ் - பேருந்து டிக்கட் - பயணச்சீட்டு டென் தர்ட்டி – பத்து முப்பது<br>லாஸ்ட் வீக் - கடந்த வாரம்<br>ரிசர்வ் - முன்பதிவு</td><td>6x½=3</td></tr>
<tr><td>ஆ</td><td colspan="4">53 - ருங 284 – உஅச 61 - சாக 795 - எகூரு</td><td>4x½=2</td></tr>
<tr><td>35 அ</td><td colspan="4">மரங்கள் நமக்கு மிகவும் பயனுள்ளவை. அவை நமக்கு மரத்தடிகளையும் விறகையும் தருகின்றன. மரத்தடிகள் நாற்காலி, மேசை மற்றும் மரச்சாமான்கள் செய்வதற்குப் பயன்படுகின்றன. சில மரங்களின் எண்ணெய் வித்துக்களிலிருந்து நாம் எண்ணெயைப் பெறுகிறோம். சில மரங்களின் இலைகளும் கனிகளும் மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.</td><td>3</td></tr>
<tr><td>ஆ</td><td colspan="2">1. எலி வளையானாலும் தனி வளை வேண்டும்.<br>2. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.<br>3. ஆபத்தில் உதவுபனே உண்மை நண்பன்.<br>4. செய்யும் தொழிலே தெய்வம்.</td><td colspan="2">ஏதேனும் 2 மட்டும்</td><td>2x1=2</td></tr>
<tr><td>35</td><td colspan="4">மாற்றுவினா 1. கதரின் வெற்றி 2. சங்கரதாசு சுவாமிகள் 3. பம்பல் சம்பந்தனார்<br>4. பிரகலாதன், சிறுத்தொண்டர், இரவகுசா, பவளக்கொடி, அபிமன்யு, சுந்தரி<br>5. கதரின்வெற்றி, தேசியக்கொடி, தேசபக்தி</td><td>5x1=5</td></tr>
<tr><td></td><td colspan="4">பகுதி-4</td><td>1x5=5</td></tr>
<tr><td>36</td><td colspan="4">பொருத்தமான கதை, கவிதைக்கு மதிப்பெண் வழங்கலாம்</td><td></td></tr>
<tr><td>37</td><td colspan="4">திரண்ட கருத்து -1 எதுகை, மோனை நயங்கள் -2 இயைபு நயம் -1 அணிநயம்-½ பொருள் நயம்-½</td><td>5</td></tr>
<tr><td>38</td><td colspan="4">வங்கிபெயர், கிளை -1; நாள் -½ ; கணக்கு எண் -½; பெயர் –½ தொகை எண்ணாலும் எழுத்தாலும் - 1 கையொப்பம-½ ரூபாய் தாள்களின் விவரம் -1</td><td>5</td></tr>
<tr><td>39</td><td colspan="4">சரியான விடை எழுதியிருப்பின் மதிப்பெண்கள் வழங்கலாம்</td><td>3+2=5</td></tr>
<tr><td>40 அ</td><td colspan="4">அனுப்புநர் -2 பெறுநர்-2 ஐயா –½பொருள் -½ கடிதப்பகுதி -2 இடம்,நாள் - 1 தங்கள் உண்மையுள்ள -1 உறைமேல்முகவரி -1½</td><td>10</td></tr>
<tr><td>ஆ</td><td colspan="4">அனுப்புநர்முகவரி, நாள் -2 விளி -1 நலம்விசாரித்தல் 2 கடிதப்பகுதி –3<br>அன்புள்ள - 1 உறைமேல்முகவரி-1</td><td>10</td></tr>
<tr><td>41</td><td colspan="4">கருத்து – 5 பத்தி அமைப்பு -1½ பழமொழிகள், மேற்கோள்கள்-2 நிறுத்தற்குறிகள் -1 தெளிவான கையெழுத்து ½</td><td>10</td></tr>
</table>